## இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2017

-----------------------------------------------------------------------------------------

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 51(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் எழும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

அரசாங்கத்திடமிருந்தும் ஏனைய செயற்திட்டங்களிலிருந்தும் கிடைத்த மூலதன மானியத்தைப் பயன்படுத்தி ரூபா 707,807,391 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் வருடாந்தம் தேய்மானம் செய்யப்படுகின்றபோதும், அந்த மூலதன மானியம் காலக்கழிவு செய்யப்பட்டுக் கணக்கிலிடப்படும் கொள்கையை பல்கலைக்கழகம் இனங்கண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு தொடக்கம் மூலதன நிதியேற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை இனங்கண்டு அவற்றிற்குரிய தேய்மானத்திற்கான பெறுமதி மூலதன மானியக் கணக்கில் பிற்போட்ட வருமானமாக செயலாற்றல் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமமங்கள்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 21 ஆம் பந்திக்கு ஒவ்வாதவாறு மீளாய்வாண்டின்போது கட்டிடங்களினதும் வாகனங்களதும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குச் செலவிடப்பட்ட முறையே ரூபா 1,681,850 மற்றும் ரூபா 1,042,461 என்பன மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(ஆ) நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றினது நியாயமான பெறுமதி குறிப்பிடத்தக்களவு மாற்றமடையுமிடத்து அவற்றை மீளப் பெறுமதியிட வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 491,051,777 நிகர பெறுமதியுடைய சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பன மீளப் பெறுமதியிடப்படவில்லை.

(இ) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களது பயன்தரும் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 46,798,533 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானமாகியிருந்தும் தொடர்ந்து பயன்பட்டவாறிருந்தன. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 03 ஆம் இலக்க பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளின் நிர்மாண வேலை ஒப்பந்தங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 723,062 மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்டிருந்தபோதும், அது திருப்பிச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த பணக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக குறித்த சொத்துக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் சொத்துக் கணக்கும் திருப்பிச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த பணக் கணக்கும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும், விடுவிக்கப்பட்ட தொகையில் ரூபா 188,540 திருப்பிச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த தொகையான ரூபா 2,006,144 க்குள் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளடங்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது நிர்மாண வேலைகளுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 30,480,475 முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்படாது கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் கட்டிடக் கணக்கும் முற்பணக் கணக்கும் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(இ) மட்டக்குளியில் உள்ள தலைமை அலுவலக வளாகத்தில் நிர்மாணிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஐந்தடுக்கு விரிவுரை மண்டபக் கட்டிடத்திற்கான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 6,126,550 மற்றும் மண் பரிசோதனைக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 331,132 என்பன நடைபெறும் வேலையாக கணக்கிலிடப்படுவதற்குப் பதிலாக கட்டிடம் மற்றும் நிர்மாண வேலைக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதியேற்பாடு இல்லாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாண வேலை நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தங்காலை வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டவாறிருந்த வேலைத்தளத்திற்கும் விரிவுரை மண்டபக் கட்டிடத்திற்குமென கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,604,783 மற்றும் வேறு நிர்மாண வேலைகளுக்காக சேர்ந்து நின்ற செலவினத்தின் கீழ் காட்டப்பட்ட ரூபா 16,321,399 என்பன முடிவுறாத வேலைகளின் கீழ் காட்டப்படாது மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைக் கணக்கும் முடிவுறாத வேலைக் கணக்கும் முறையே ரூபா 17,926,182 அதிகரித்தும், குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உடன்படிக்கைக்குள்ளான 02 நிர்மாண வேலைகளது உடன்படிக்கைத் தொகை ரூபா 21,889,116 ஆகும். இது மூலதனமாக்கப்பட்டதால் நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைக் கணக்கு மற்றும் சேர்ந்து நின்ற செலவினக் கணக்கு என்பன அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும், உடன்படிக்கைப் பிரகாரம் நிர்மாண வேலை நடைபெறாமையால் ரூபா 15,387,672 பெறுமதியான அந்த ஒவ்வொரு நிர்மாண வேலைக்குரிய உடன்படிக்கைகள் 2018 யூன் 12 ஆந் திகதியன்று இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்ட கேள்வி வைப்புத் தொகையான ரூபா 200,000 திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மீள அறவிடப்பட வேண்டிய வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் கொடுப்பனவு செய்ய வேண்டிய கேள்வி வைப்புக் கணக்கும் மீள அறவிட வேண்டிய வைப்புக் கணக்கும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டினதும் முன்னைய 03 ஆண்டுகளினதும் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டில் கணக்குகளில் நிதியேற்பாடு செய்யப்படாது மீளாய்வாண்டின்போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 24,590,014 சம்பள நிலுவையில் ரூபா 8,762,125 கடன்கொடுத்தோர் கணக்கிலும் எஞ்சிய ரூபா 15,827,889 சேர்ந்து நின்ற செலவினக் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டமையால் அக்கணக்குகள் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. மேலும், அவ்வாறாகத் தவறாகக் கணக்கிலிடப்பட்டமையால் கடன் கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 8,153,444 வரவு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தை வந்தடையாத பண்டங்களும் சேவைகளும் ரூபா 7,134,344 ஆகும். அது சேர்ந்து நின்ற செலவினமாகக் கணக்கிலிடப்பட்டமையால் சேர்ந்து நின்ற செலவினக் கணக்கு அதேயளவாலும் நிலையான சொத்துக்கள் கணக்கு ரூபா 6,887,057 தொகையாலும் எழுதுகருவி வகைப் பொருட்களது கொள்வனவுக் கணக்கு ரூபா 247,287 தொகையாலும் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்கென நிதி அமைச்சிடமிருந்தும் வேறொரு திணைக்களத்திடமிருந்தும் சுவீகரித்திருந்த 4 வாகனங்களது பெறுமதியாகிய ரூபா 27,159,250 மற்றும் அதற்குரிய தேய்மான நிதியேற்பாடாகிய ரூபா 6,789,812 என்பன கணக்கிலிடப்படவில்லை.

### 2.2.4 தொங்கற் கணக்கு

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 2011 முதலாக இருந்து வரும் இனங்காணப்படாத ரூபா 85,433 தொங்கற் கணக்கு மீதியைத் தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பட்டப்படிப்புக் கற்கை நெறிக் கட்டணம் ரூபா 15,754,623 ஆகும். அவற்றுள் அடங்கிய 2001 முதல் 2003 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 5,913,500 மற்றும் 2015/2016 கல்வியாண்டுக்குரிய பட்டப்படிப்பு மற்றும் ஏனைய கற்கை நெறிகளின் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 9,841,123 என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை மாணாக்கரிடமிருந்து அறவிடப்படாதிருந்தன. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் சகல கற்கை நெறிகளுக்கும் பல்கலைக்கழகக் கட்டணம் அறவிடப்படாமையால் மொத்தத் தொகையையும் அறவிடுவதானது நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது. கற்கை நெறிக் கட்டணத்தை அறவிடாமைக்கான முறையான அங்கீகாரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) விடுதிகளைச் சேர்ந்த மாணாக்கர் அங்கிருந்து வெளியேறி நெடுங்காலமானதால் 2001 முதல் 2003 வரையான காலப்பகுதியின்போது அங்கிருந்த மாணாக்கரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 798,671 அறவிடப்படுவது நிச்சயமற்றதாகவிருந்தது. மேலும், 2017 முதல் விடுதியில் உள்ள மாணாக்கரிடமிருந்து பணம் அறவிடப்படாமையால் முன்னைய ஆண்டுகளின் போது பெற வேண்டிய மாணாக்கரது விடுதிக் கட்டணமாகிய ரூபா 2,526,383 கொடுப்பனவு செய்வதையும் மாணாக்கர் புறக்கணித்திருந்தனர். எவ்வாறாயினும், மாணாக்கரிடமிருந்து விடுதிக் கட்டணத்தை அறவிடாமைக்கான முறையான அங்கீகாரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) சுனாமி கடன் மீதியாக ரூபா 191,464 ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வுத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் இல்லாமையால் அறவீடு நிச்சயமற்றதாகவிருந்தது.

(ஈ) 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் சேர்ந்து நின்ற செலவினமாகிய ரூபா 5,989,432 மீதினை இனங்கண்டு தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) 2002 முதல் 2013 வரையன காலப்பகுதியின்போது பல்வேறு சேவைகளைப் பெறுவதற்கு நாரா (National Archives and Records Administration) நிறுவனத்தில் வைப்பிலிடப்பட்ட ரூபா 445,750 மற்றும் Scuba Diving நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2009 முதல் பெற வேண்டியிருந்த ரூபா 930,592 என்பன அந்நிறுவனங்களால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியனவாக உறுதி செய்யப்படவில்லை.

(ஊ) நெடுங்காலமாக கணக்காய்வுக் கட்டணமாகிய ரூபா 67,247 பெற வேண்டியவனவாக தீர்வு செய்யப்படாது கணக்கில் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2014 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 10(1), 13(1), 18, 24(1), 28 ஆம் பிரிவுகள் | குறித்த பிரமாணங்களின் பிரகாரம் வேந்தர் ஒருவர் நியமிக்கப்படாததுடன், நிறைவேற்று சபை, கலைச் சபை மற்றும் சபைகள் என்பவற்றை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதிய 955 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை என்பன | அதிகாரச்சட்டத்தினதும் சுற்றறிக்கையினதும் ஏற்பாடுகளுக்கு முரணாக ஊழியர் சேமலாப நிதியத்தைக் கணிப்பிடுகையில் வாழ்க்கைச் செலவுப் படிக்குப் புறம்பாக கொடுப்பனவு செய்யப்பட்ட ஏனைய படிகளும் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்குக் கணிப்பிடப்பட்டதுடன், 2010 முதல் 2012 வரையான காலப்பகுதியின்போது குறித்த நிதியத்திற்கு ரூபா 777,342 கூடுதலாக வழங்கப்பட்டுமிருந்தது. மேலும், 2012 யூலை மாதத்தின் பின்னரும் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத் தொகையைக் கணிப்பிட்டு எதிர்வரும் கொடுப்பனவுகளில் அதனை ஈடுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்த போது சம்பளத்துடன் சேர்த்துச் செலுத்தப்பட்ட கல்விசார் படிகள் கணக்கிற்கு எடுக்கக் கூடாத போதிலும் அதற்கு முரணாக பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

---

(i) அத்தியாயம் VIII பிரிவு 6.1 — மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளத்தின் அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் விடுமுறை தினக் கொடுப்பனவும் கணிப்பிடப்பட வேண்டுமாயினும், மொத்த சம்பளத்தின் அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

---

(i) நிதிப்பிரமாணம் 206 — மீளாய்வாண்டின்போது நிறுத்தி வைத்த ரூபா 723,062 விடுவிக்கப்படுகையில் பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 565(2) — பிரமாணங்களின் பிரகாரம் பொது வைப்புப் பதிவேடு பேணப்படவில்லை.

(iii) நிதிப்பிரமாணங்கள் 570, 571, 572 என்பன — இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருப்பி செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த பணமாகிய ரூபா 2,006,144 தொடர்பாக பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 835 —

(i) மாணாக்கரது விடுதிகளுக்கென 02 கட்டிடங்களைக் குத்தகைக்குப் பெறுவதற்கு ரூபா 1,650,000 ஆரம்ப முற்பணமாக குத்தகையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், குறித்த அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

(ii) மூல முற்பணம் வழங்குதல் தொடர்பான நிபந்தனைகளுக்கு சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டபோதும், மேற்படி கட்டிட உடன்படிக்கையின்போது அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. மேலும், அக்கட்டிடங்களில் உள்ள பண்டங்களும் பொருத்திகளும் தொடர்பான நிரல் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

(உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை — ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 31,211,626 கிரயத்தையுடையதும் மீளாய்வாண்டின்போது ரூபா 4,370,860 க்குக் கொள்வனவு செய்யப்பட்டதுமான கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணிகள் என்பவற்றிற்கு நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது பல்கலைக்கழக நிதிப் பெறுபேறு ரூபா 21,768,782 மிகையாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 81,951,775 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது ரூபா 103,720,557 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அரசாங்க மானியம் ரூபா 72,161,000 அதிகரித்தும் அரசாங்க மானியத்தில் ரூபா 47,915,337 பிற்போட்ட வருமானமாக சீராக்கல் செய்யப்பட்டமையும் மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

முன்னைய ஆண்டினதும் கடந்த 2 ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 55,500,835 மற்றும் ரூபா 81,951,775 பற்றாக்குறை நிலவியபோதும், 2017 ஆம் ஆண்டில் ரூபா 21,768,782 மிகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 120,958,811 ஆகவிருந்த பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 234,018,352 வரை தொடர்ந்து அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பட்டப்படிப்பு மற்றும் தொழில்சார் பயிற்சிக் கற்றை நெறிகளை நடாத்துதல் மற்றும் நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் கடற்றொழிலாளர்களுக்கு அறிவூட்டும் நிகழச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பன பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்டபோதும், பல்கலைக்கழகத்தில் ஆட்சேர்க்கப்படும்போது கடற்றெழில் மற்றும் சமமான துறைகளில் உள்ள ஊழியர் குழாத்திற்கு தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கற்கை நெறிகளை வழங்குவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) மாணாக்கரை ஆட்சேர்த்தல் மற்றும் கற்கை நெறிகளை நடாத்துதல் தொடர்பான செயலாற்றலில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) பட்டப்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துதல்**

2017/2018 கல்வியாண்டின் பொருட்டு 02 கல்லூரிகளது 04 பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்குப் புதிய மாணாக்கரை ஆட்சேர்ப்பதில் ஆண்டின் இறுதி வரை தாமதம் நிலவியது. அதனால் மீளாய்வாண்டின்போது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

**(ii) டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்துதல்**

மீளாய்வாண்டின்போது 06 கல்லூரிகளில் 03 டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு இலக்கிடப்பட்ட 12 தொகுதிகள் மற்றும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 194 என்பன ஆகியபோதும், உள்ளவாறு 06 கல்லூரிகளின் 07 தொகுதிகளுக்கும் 144 மாணாக்கரே பதிவு செய்யப்பட்டமையால் கற்கை நெறிகளை நடாத்துவது மற்றும் மாணாக்கர்களது பதிவில் முன்னேற்றம் என்பன முறையே 58 சதவீதம் மற்றும் 74 சதவீதம் ஆகியிருந்தன. 2015 ஆம் ஆண்டின்போது நீர்கொழும்பு கல்லூரியில் ஆட்சேர்க்கப்பட்ட 29 மாணாக்கர்களுக்கு மீளாய்வாண்டின்போது டிப்ளோமா நெறிகள் பூர்த்தியாகவிருந்தபோதும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிராமை கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் மூலம் தெரிய வந்தன.

**(iii) சான்றிதழ் பத்திர கற்கை நெறிகளை நடாத்துதல்**

**Continuous Discharge Certificate (CDC கற்கை நெறி)**

- வர்த்தகக் கப்பல் ஒன்றில் தொழில் செய்வதற்குத் தேவையான தொடர் சான்றிதழ் (CDC) கற்கை நெறியின் கீழ் மட்டக்குளியிலும் தங்காலையிலும் உள்ள இரு கல்லூரிகளிலும் டெக்ரேடிங் மற்றும் என்ஜின் ரேடிங் எனும் கற்கை நெறிகளுக்கு 2015 ஏப்ரல் 07 முதல் 2018 ஏப்ரல் 06 வரை 03 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகுமாறு ISO 9001-2008 நிலைமைச் சான்றிதழ் பெறப்பட்டிருந்ததுடன், அச்சான்றிதழைப் பெறுவதற்கு ரூபா 3 மில்லியனுக்கும் அதிகமாகச் செலவாகியிருந்தது. மீளாய்வாண்டின்போது இக் கல்லூரிகள் இரண்டிலும் 02 கற்கை நெறிகளுக்கு 04 தொகுதிகளுக்கு 120 மாணாக்கர் ஆட்சேர்க்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டபோதும், மட்டக்குளிய கல்லூரியில் 2 கற்கை நெறிகளுக்கு மாத்திரம் 42 மாணாக்கர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், நிலைமைச் சான்றிதழ் பெறப்பட்ட காலப்பகுதியின்போது தங்காலை வித்தியாலயத்தில் இக்கற்கை நெறி நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, CDC தொகுதியினரை ஆட்சேர்ப்பதில் 50 சதவீத முன்னேற்றமும் மாணாக்கரை ஆட்சேர்ப்பதிலான முன்னேற்றம் 35 சதவீதமாகவும் இருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.
- மட்டக்குளிய கல்லூரியில் CDC கற்கநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருந்த மாணாக்கரது எண்ணிக்கை 33 ஆகும். நிலைமைச் சான்றிதழைப் பெறுவதற்கு ஏற்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக குறிப்பிடத்தக்க பயனைப் பெற்றிராமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

**National Vocational Qualification (NVQ கற்கை நெறி)**

- மீளாய்வாண்டின்போது 07 NVQ கற்கை நெறிகளின் கீழ் 08 கல்லூரிகளில் 30 தொகுதிகளில் 534 மாணாக்கரை ஆட்சேர்ப்பது என இலக்கிடப்பட்டபோதும், 05 கல்லூரிகளில் 07 கற்கை நெறிகளின் கீழ் 15 தொகுதிகளுக்கு 202 மாணாக்கர் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தமை புலனாகியது. அதற்கமைய, தொகுதி ஆட்சேர்ப்பு 50 சதவீதமாகவும் மாணாக்கர் பதிவிலான முன்னேற்றம் 38 சதவீதமான குறைந்த மட்டத்திலும் இருந்தன.

- NVQ மட்டத்திலான 10 கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்யப்பட்ட 78 மாணாக்கருக்கு மீளாய்வாண்டின்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இப்பத்துக் கற்கை நெறிகளது ஆரம்பத்திலும் (2016 மற்றும் 2017) பதிவு செய்யப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கை 129

ஆகியமையால் கற்கை நெறிகளிலிருந்து விலகிய மாணாக்கரின் எண்ணிக்கை 51 ஆவதுடன், அது பதிவு செய்யப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கையில் 40 சதவீதமும் ஆகும்.

**NON NVQ கற்கை நெறி**

NON NVQ கற்கை நெறிகள் எட்டுக்கும் 08 கல்லூரிகளில் 440 மாணாக்கரை ஆட்சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டபோதும், உள்ளவாறு 08 கல்லூரிகளிலும் 05 கற்கை நெறிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட மாணாக்கரது எண்ணிக்கை 50 சதவீதமான 222 ஆகும்.

**(இ) கல்லூரி எனும் விதத்தில் கற்கை நெறிகளை நடாத்துதல் மற்றும் மாணாக்கரைப் பதிவு செய்தல் சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

பல்கலைக்கழக பதவியணியில் உள்ளடங்கும் பணிகள் நிறைவேறாமை, விரிவுரையாளர்களை ஆட்சேர்க்காமை, மாணாக்கரை ஆட்சேர்ப்பது தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படாமை போன்ற காரணங்களால் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்காது போவதால் கல்லூரிகளது முன்னேற்றம் பின்வருமாறு நலிவான மட்டத்திலிருந்தன.

(i) தங்காலை கல்லூரியில் 02 டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 27 மாணாக்கரும் டெக்ரேடிங் மற்றும் என்ஜின் ரேட்டிங் (CDC கற்கை நெறி) ஆகிய 02 கற்கை நெறிகளுக்கு 40 மாணாக்கரை ஆட்சேர்ப்பதெனத் திட்டமிட்டிருந்தபோதும், மாணாக்கர் எவருமே ஆட்சேர்க்கப்பட்டிராததுடன், 45 மாணாக்கரை ஆட்சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்ட 03 சான்றிதழ் கற்கை நெறிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நீர்கொழும்பு கல்லூரியில் 02 டிப்ளோமா கற்கை நெறிகளும் 05 NVQ கற்கை நெறிகளும் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டபோதும், ஒரு டிப்ளோமா கற்கை நெறியும் 02 NVQ கற்கை நெறிகளும் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாக மீளாய்வாண்டின் போது நீர்கொழுப்பு கல்லூரியில் 125 மாணாக்கரை ஆட்சேர்ப்பதற்கு திட்டமிட்டபோதும் 96 மாணாக்கரே பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

(iii) மட்டக்களப்பு கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 22 மாணாக்கரின் பங்குபற்றுதலுடன் ஒரு டிப்ளோமா கற்கை நெறி நடாத்தப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட 04 NVQ கற்கை நெறிகள் நடாத்தப்படவில்லை. மீளாய்வாண்டின்போது கல்வி கற்ற ஒட்டுமொத்த மாணாக்கரது எண்ணிக்கை 70 ஆகும்.

(iv) களுத்துறை கல்லூரியில் 03 கற்கை நெறிகளுக்கு 45 மாணாக்கரை ஆட்சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 02 டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 15 மாணாக்கர் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(v) திருகோணமலை கல்லூரியில் மீளாய்வாண்டின்போது டிப்ளோமா கற்கை நெறிகள் எதனையும் நடாத்துவதற்குத் திட்டமிடாதபோதும், 90 மாணாக்கரை ஆட்சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்ட 04 NVQ சான்றிதழ் கற்கை நெறிகளுக்கு மாணாக்கர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மேலும், ஆண்டின்போது திட்டமிடப்பட்ட சான்றிதழ் கற்கை நெறிக்கு (NON NVQ) 16 மாணாக்கரும் திட்டமிடப்படாத சான்றிதழ் கற்கை நெறிக்கு (NON NVQ) 15 மாணாக்கரும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், அக்கற்கை நெறிகளது காலஎல்லை 02 வாரங்களுக்கும் குறைவானவையே என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 முதல் 2012 வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிலுவையை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யும்போது ஊழியரது பங்களிப்பான ரூபா 2,039,472 பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது தண்டப்பணமாகப் பல்கலைக்கழகம் செலுத்தவேண்டியேற்பட்ட தொகை ரூபா 2,936,012 ஆகும்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் தலைமை அலுவலகம் அடங்கலாக பிரதேசத்தில் அமைந்துள்ள 08 கல்லூரிகளது காணி, கட்டிடங்கள், ஏனைய சொத்துக்களது உரித்தைச் சுவீகரிப்பதற்குப் பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

**4.3 நிதியத்தைக் குறைவாகப் பயன்படுத்தல்**

தேசிய நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் நிர்மாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 60.75 மில்லியன் ஆகும். இதில் 36 சதவீதமான ரூபா 21.64 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்தது.

**4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் ரூபா 14 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு சுற்றுலா மனைக்கு மீளாய்வாண்டில் ரூபா 07 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 04 ஆண்டுகளாகியும் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம், 07 விசாலமான கடற்றொழில் படகுகள், 05 சிறிய அளவிலான படகுகள், 01 அதி வேகப் படகு என்பன பல்கலைக்கழகத்திடம் இருந்தன. அவற்றுள் அதி வேகப் படகும் 05 விசாலமான கடற்றொழில் படகுகளும் சிறிய அளவிலான 01 படகும் கடந்த பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்தன.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 327 ஆகும். உள்ளவாறான பதவியணி 188 ஆகியமையால் 139 வெற்றிடங்கள் நிலவின.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றி ஒப்பந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் 15 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பல்கலைக்கழகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்படாதிருந்ததுடன், அத்தினத்தில் உள்ளவாறு தேசிய கடற்றொழில் மற்றும் கடற் பொறியியல் நிறுவனத்தின் ஊழியர்களை பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையும் முடிவடையாதிருந்தது.

(இ) தங்காலைக் கல்லூரியின் பெண் விரிவுரையாளர் ஒருவர் 2016 பெப்ரவரி 22 தொடக்கம் 2019 பெப்ரவரி 28 வரை வெளிநாட்டுப் புலமைப்பரிசிலுக்காக தீவிலிருந்து வெளியேறியிருந்தார். எவ்வாறாயினும், அவ்வுத்தியோகத்தர் வெளிச் செல்வதற்கு முன்னர் முழுச் சம்பளத்துடனான கல்விசார் லீவுக்கான அங்கீகாரத்தைப் பெற்றிராததுடன், பிணை வைப்பிலும் உடன்படிக்கையிலும் ஈடுபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், அவருக்கு 2016 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான சம்பளமாக ரூபா 125,870 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதனைப் மீளப் பெறுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 4.6 வாகனப் பயன்பாடு

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்குரிய 29 வாகனங்களில் 08 வாகனங்கள் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தன. அவ்வாகனங்களை மீளாய்வாண்டின் இறுதி வரை பழுதுபார்ப்பதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016, 2017 ஆம் ஆண்டுகளின்போது 4 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பான பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு ரூபா 716,928 செலவாகியிருந்தது. எவ்வாறாயினும், காப்புறுதி நிறுவனம் மீளளிப்புச் செய்த தொகை ரூபா 548,000 ஆகியமையால் ரூபா 168,928 இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

-------------------------------------------------------------------------------

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

-------------------------------------------------------------------------------------------------------------------

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுவதுடன், அதன் பொருட்டு 2017 ஒக்டோபர் 03 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டு சுற்றறிக்கையின் மூலம் சகல அரச நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்பட வேண்டுமென சகல அரச நிறுவனங்களும் அறிந்திருக்க வேண்டுமாயினும், பல்கலைக்கழகம் அது தொடர்பாக அறிந்திராமையால் அப்பணிகளுடன் தொடர்புடைய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு, அவ்விலக்கை எய்துவதற்கு அளவுகோலாகப் பயன்படுத்தும் சுட்டு என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 பொருட் தேடலும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

### 6.1.1 பொருட் தேடல்

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துவதற்குத் தேவையான விரிவுரை மண்டபம், கணனி ஆய்வுகூடம், நூலகம் போன்ற வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் மாதாந்தம் ரூபா 2.3 மில்லியன் குத்தகை வாடகையில் 2 ஆண்டுகளுக்கு கட்டிடம் ஒன்றைக் குத்தகைக்குப் பெறுவதற்கும் அக்கட்டிடத்தின் உட்புறத்தை வெவ்வேறாகப் பிரிப்பதற்குமென ரூபா 22.56 மில்லியன் எனவும் மொத்தமாக ரூபா 77.76 மில்லியனுக்கான உடன்படிக்கைகள் இரண்டும் 2017 திசெம்பர் 26 இல் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கைகளின் நிபந்தனைப் பிரகாரம் அக்கட்டிடத்தின் குத்தகைக் காலம் மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவதற்கும் குத்தகையாளர் இணக்கம் தெரிவித்திருந்தார்.

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 6(2)(1) ஆம் பிரிவின் பிரகாரம்இது தொடர்பாகக் குறித்த அமைச்சரின் எழுத்து மூல அதிகாரம் பல்கலைக்கழக பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டிராததுடன், இது தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது 2017 செப்டெம்பர் 18 ஆந் திகதியன்றே ஆயினும், கட்டிடத்தை வாடகைக்குப் பெறுவதற்கான முதலாவது பொருட் தேடல் அறிவிப்பு 2017 யூலை 06 ஆந் திகதிய புதினப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கேள்வி கோரலுக்கான முகவுரைப் பந்தியிலும் கேள்வி கோரலுக்கான நிபந்தனைப் பந்தியில் காணப்பட்ட விபரத்திலும் ஒன்றுக்கொன்று முரண்பாடு காணப்பட்டமையால் பொருட் தேடல் அறிவித்தலில் உள்ள பிழையை திருத்தம் செய்வதற்கு 2017 யூலை 17 ஆந் திகதி இரண்டாவது முறையாகவும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு அதற்கென ரூபா 83,720 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம், உடன்படிக்கைக்குள்ளான தொகையின் 50 சதவீதமான ரூபா 27.6 மில்லியன் 2017 டிசெம்பர் 27 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு பொருட் தேடல் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 க்கு முரணானது.

(iv) நான்கு ஆண்டு குத்தகைக்குப் பெறப்பட்ட இக்கட்டிடத்திற்கான குத்தகை வாடகையும் உள்ளகத்தே கூடங்களைப் பிரிவுபடுத்தும் செலவினமாகவும் ஏறக்குறைய ரூபா 147.70 மில்லியன் செலவாகுவதலால் பொருட் தேடல் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 மற்றும் 33 ஆம் மேலதிகம் என்பவற்றின் பிரகாரம் இப்பணியை அமைச்சின் பொருட் கொள்வனவுக் குழுவே மேற்கொண்டிருக்க வேண்டுமாயினும், அதற்கு முரணாக திணைக்களப் பொருட் தேடல் குழு தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது.

(v) கேள்வி கோரல் நிபந்தனைகளுக்கமைய, கட்டிடத்தின் முழு நில அளவும் 25,000 சதுர அடி அல்லது அதற்கு அதிகமாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், கட்டிடமானது 03 மாடிகளைக் கொண்ட (ஏறக்குறைய) 22,300 சதுர அடியைக் கொண்டிருந்தமை 2018 யூலை 09 ஆந் திகதிய நேரடிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

(vi) இக்கட்டிடத்தை குத்தகைக்குப் பெறும்போது முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 27,600,000 தொடர்பாக 835(1)(இ) நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அமைச்சினது செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை.

(vii) குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், தொழில்சார் கட்டணமும் முத்திரைக் கட்டணமும் பதிவு செய்வதற்கான கட்டணமுமான ரூபா 833,000 இருசாரராலும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டியபோதும், பல்கலைக்கழகம் குறித்த சட்டத்தரணிக்கு ரூபா 623,500 செலுத்தியதன் காரணமாக ரூபா 207,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(viii) இக்கட்டிடம் அமைந்துள்ள முழுக் காணியிலும் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதால் அருகில் உள்ள சுற்றாடலுக்கு இட வசதி இல்லாது, அதன் காரணமாக பல்கலைக்கழக மாணாக்கருக்குத் தகுந்த காற்று வசதியுடன் கூடிய சூழல் இல்லாது போனமை அவதானிக்கப்பட்டது.

(ix) பட்டப்படிப்புக் கற்கை நெறியை நடாத்துவதற்கென 04 ஆண்டு காலக் குத்தகைக்குப் பெறப்பட்ட இக்கட்டிடத்திற்கு ஏறக்குறைய ரூபா 169.76 மில்லியன் செலவு ஏற்படுவது அவதானிக்கப்பட்டதுடன், இத்தேவையின் பொருட்டுக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கைகளையும் பல்கலைக்கழகம் மேற்கொண்டிருக்கவில்லை.

(x) குத்தகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 01 ஆண்டுகால முடிவடைந்திருந்தபோதும், சகல பட்டப்படிப்புக் கற்கை நெறிகளும் தலைமை அலுவலக வளாகத்திலேயே நடைபெற்றிருந்தன. இதற்கமைய, தலைமை அலுவலகத்தில் கற்கை நெறிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் மாணாக்கரது எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடையாததால் மேற்படி கட்டிடத்தைக் குத்தகைக்குப் பெறுவது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது.

### 6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொத்தத் தொகை ரூபா 49.5 மில்லியனான 04 ஒப்பந்தங்களுக்குரிய ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் வேலை முடிவடையும் காலம் நிறைவடைந்திருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 மே 10 ஆந் திகதியளவிலும் அந்நிர்மாண வேலைகள் முடிவடையாதிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரு ஒப்பந்தங்களில் 2018 மே 10 இல் உள்ளவாறான உருப்படி முன்னேற்றம் 70 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்திலேயே இருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் கால நீடிப்பு கோரப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், மேற்பார்வை பொறியியலாளரும் அது தொடர்பாகக் கவனம் செலுத்தியிராமை கோவைகளைப் பரிசோதித்தபோது அவதானிக்கப்பட்டது.

(ii) பூசா கல்லூரிக் கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கான ஒப்பந்தகாரருடன் ரூபா 18,148,219 பெறுமதியிலான ஒப்பந்தம் 2017 டிசெம்பர் 17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. 2018 யூலை 17 ஆந் திகதி முடிவடைய வேண்டிய இச்செயற்திட்டம் 2018 யூலை 17 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(iii) மட்டக்குளியில் ரூபா 13,380,585 செலவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வெல்டிங் தொழிற்சாலை 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. கணக்காய்வுத் தினமான 2018 மே 10 இல் உள்ளவாறான அதன் முன்னேற்றம் 12 சதவீதமாகும்.

ஒப்பந்தகாரர் இந்நிர்மாண வேலைகளுக்கான நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளமையால் கூறு விலைகளைக் கோருவதற்கு மதிப்பீடு திருத்தஞ் செய்யப்படுவதாக இது தொடர்பாக உப வேந்தர் கணக்காய்விற்கு தெரிவித்திருந்தார்.

இதற்கமைய, ரூபா 49.5 மில்லியன் பெறுமதியான 04 நிர்மாண வேலைகளது தாமதம் சம்பந்தமாக உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகள் மற்றும் பொருட் கொள்வனவு வேண்டுகோளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் பகுதிவாரி நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 27,646,398 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை நிர்மாணப் பணியில் ஈடுபட்ட ஒப்பந்தகாரரின் மூலம் நிறைவேற்றுவதற்குப் பதிலாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினூடாக மேற்கொள்வதற்கு ரூபா 2,147,737 கிரயம் செலவாகியது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | கொடுக்கல் வாங்கல்களும் நாட்குறிப்புகளும் பிழையின்றி பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்யப்படாமை, ஒரே வகையான அல்லது ஒரே பாவனைக்கான சொத்துக்கள் ஒரே சொத்து வகையின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படாமை |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | சொத்துக்கள் சட்டரீதியாக சுவீகரிக்கப்படாமை மற்றும் சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்துதல். |
| (இ) ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல் | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை. |
| (ஈ) பொருட் தேடல் | கட்டிடங்களைக் குத்தகைக்குப் பெறுகையில் பொருட் தேடல் வழிகாட்டல் மற்றும் நிதிப்பிரமாணங்களைக் கடைப்பிடிக்காமை |
| (உ) பதவியணி நிர்வாகம் | பதவியணிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முறையாக நடைபெறாமை மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை என்பன காரணமாக திட்டமிட்டவாறு கற்கை நெறிகளை நடத்த முடியாமை. |

| | |
|---|---|
| (ஊ) நிதிக் கட்டுப்பாடு | செலவினத்திற்கென நிச்சயமான செலவின விடயங்களும் அளவும் தொடர்பாகப் பல்கலைக்கழகத்திற்கு அறிவித்திராமையால் தலைமை அலுவலகத்தால் கொடுப்பனவு செய்யக்கூடியதாகவிருந்த வெளிவாரி விரைவுரைகளுக்கான படி மற்றும் பழுதுபார்த்தல் போன்ற செலவினங்களை சில்லறைக் காசின் மூலம் செய்தமை. |